# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம் எஸ்.இராமலிங்கபுரம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின்
[illegible]
செயல்முறைகள் : [illegible]

ந.க.எண் / 001 /21

*********

நாள்: 11.2021

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் - இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம் எஸ்.இராமலிங்கபுரம் ஊராட்சி - எஸ்.இராமலிங்கபுரம் கிராமம் சர்வே எண் 35/2A,2B, 3A1, 3A3, 56/1A1, 1C1,1D1, 1E1 -ல் 2.158 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் - தொடர்பாக

பார்வை : 1.திரு.ரா.[illegible] 142, பாரதி நகர், இராஜபாளையம் என்பவரின் விண்ணப்பம் நாள். 11.2021.
2.விருதுநகர் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், அலுவலக கடிதம் ந.க.எண். 713/2021 விருமா நாள்: 27.10.2021.
3.தானப்பத்திரம் எண். 3226/2021 மற்றும் 3227/2021 நாள்: 20.9.2021.

*********

<u>உத்தரவு:-</u>

இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட எஸ்.இராமலிங்கபுரம் ஊராட்சி - எஸ்.இராமலிங்கபுரம் கிராமம் சர்வே எண். 35/2A,2B, 3A1, 3A3, 56/1A1, 1C1,1D1, 1E1 -ல் 2.158 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 2-ல் கண்டுள்ள கடிதத்தின் படி தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு, மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.து.இ.(விருமா)எண்.27/2021 என் எண்ணிடப்பட்டு நிபந்தனைகளுடன் வரப்பெற்றுள்ளது. மேலும் பார்வை 3-ல் காணும் விவரப்படி உள்ளாட்சி பொது உபயோகத்திற்கான இடங்கள் மற்றும் சாலைகள் பத்திர பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் காணும் கடிதத்தில் நகர் ஊரமைப்புத் துறையின் மூலம் முன் அனுமதி பெறப்படும் இடங்களுக்கு கூராய்வுக் கட்டணம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1000-மும் மற்றும் நில பயன்பாட்டு மாற்றுக் கட்டணமாக சந்தை மதிப்பீட்டில் 3 விழுக்காடும் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் மனுதாரரின் இடத்திற்கான சார்பதிவாளர் கீழராஜகுலராமன் அவர்களின் வழிகாட்டு மதிப்பீட்டு சான்றின்படி சதுர மீட்டர் ஒன்றுக்கு 248.35 என்ற அடிப்படையில் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நில பயன்பாட்டு மாற்றுக் கட்டணமாக ரூ. 65067/-ம், கூராய்வுக் கட்டணமாக ரூ.2158/- ம் எஸ்.இராமலிங்கபுரம் ஊராட்சி பல் வகை ரசீது எண்: 27345 நாள்: 23.11.2021 ன் படி மொத்தம் ரூ.67225/- மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.மேலும் வளர்ச்சிக் கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25 வீதம் 5543.89 சதுர மீட்டருக்கு தொகை ரூ.138598/- எஸ்.இராமலிங்கபுரம் ஊராட்சி பல் வகை ரசீது எண்: 27346 நாள்:23.11.2021 ன் படி மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே பார்வை 2-ல் கண்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் அளிக்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதலின்படியும் அத்துடன் இணைத்து வரப்பெற்ற மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளின் அடிப்படையிலும், உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்டதாலும், உரிய நிபந்தனைகளின்படி எஸ்.இராமலிங்கபுரம் ஊராட்சி - எஸ்.இராமலிங்கபுரம் கிராமம் சர்வே எண். 35/2A,2B, 3A1, 3A3, 56/1A1, 1C1,1D1, 1E1 -ல் 2.158 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள 43 (மனை எண்கள்.1 முதல் 43) குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கி இதன்மூலம் உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:-

1. அங்கீகரிக்கப்பட்ட இம்மனைகளில் கட்டிடம் கட்டப்படும் போது கட்டிட உரிமத்தொகை தனியாக செலுத்தி கட்டிட உரிமம் உள்ளாட்சியில் பெற்றுக் கொள்ள வேண்டும்.
2. பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட மனுதாரர் பத்திர பதிவு செய்து கொடுத்த இடங்களை மனுதாரர் தனது சொந்த பொறுப்பில் அரசின் பெயருக்கு பட்டா மாறுதல் செய்து கொடுக்க வேண்டும்.
3. மனுதாரர் உபயோகம் ஒதுக்கப்பட்ட இடங்களில் கட்டுமானம் ஏதும் மேற்கொள்ளக்கூடாது.
4. தனிமனை குறித்த நில உரிமம் மற்றும் மனை அளவுகள் விபரம் ஆகியவற்றில் ஏதேனும் குறைபாடுகளோ, முறைகேடுகளோ தெரிய வந்தாலோ பார்வை 2-ல் கண்ட கடிதத்தில் சொல்லப்பட்ட நிபந்தனைகள் மீறப்பட்டதாக அறியப்பட்டாலோ, இந்த உத்தரவு எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
5. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் முழுமையாக கடைப்பிடிக்க வேண்டும் தவறும் பட்சத்தில் வழங்கப்பட்ட மனைப்பிரிவு அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு:** மனைப்பிரிவு அங்கீகாரம் மற்றும் சிறப்பு நிபந்தனைகள்.

S. Pushpa...
29/11/2021
செயல் அலுவலர்/
ஊராட்சி மன்ற தலைவர்,
எஸ்.இராமலிங்கபுரம்

பெறுநர் :

திரு.ரா.ஜீவாமோகன்,
142, பாரதி நகர்,
இராஜபாளையம்.

நகல் :

துணை இயக்குநர், மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலகம்,
விருதுநகர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர், விருதுநகர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: சார் பதிவாளர், கீழராஜகுலராமன்

Estate Re...

பதிவு அஞ்சல் ஒப்புகை சான்றுடன்

நகர் ஊரமைப்புத் துறை

73

திரு.மு.மதிமாறன், பி.இ.,
துணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கதவு எண் B70,
தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மனைப்பிரிவு,
மதுரை சாலை, சத்திரரெட்டியபட்டி,
விருதுநகர் மாவட்டம் -626 001.
Phone No.04562- 296650.
Website :www.tn.gov.in/dtcp
mail ID : vnraddtcpoffice@gmail.com

பெறுநர்.
தலைவர்,
S.ராமலிங்கபுரம் ஊராட்சி,
விருதுநகர் மாவட்டம்.

ந.க.எண்.713/2021,விருமா

நாள் 27.10.2021.

ஐயா,

பொருள் : மனைப்பிரிவு - விருதுநகர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - விருதுநகர் மாவட்டம் - இராஜபாளையம் வட்டம் / ஊராட்சி ஒன்றியம் S.ராமலிங்கபுரம் ஊராட்சி / கிராமம் - புல எண். 35/2A, 2B, 3A1, 3A3, 56/1A1, 1c1, 1D1, 1E1 -ல் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான அனுமதி/இசைவு ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை :
1. மனுதாரர் திரு.ரா.ஜீவாமோகன் அவர்களின் விண்ணப்பம் நாள். 25.06.2021. 16.07.2021. 24.09.2021. மற்றும் 12.10.2021.
2. வேளாண்மை இணை இயக்குநர் கடித ந.க.எண்.அ3/4228/2021, நாள்.04.05.2021.
3. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள். 14.07.2021. 28.07.2021, 08.09.2021 மற்றும் 07.10.2021.
4. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.19799/2020/போ, நாள்.24.12.2020.
5. அரசாணை எண். 138, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள். 04.06.2004.
6. அரசாணை எண். 79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள். 04.05.2017.
7. அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 04.02.2019 மற்றும் அரசாணை எண். 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 31.01.2020.
8. அரசாணை எண். 141, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை UD4(3), நாள்.23.09.2020.
9. அரசாணை எண். 181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை UD4(1), நாள்.09.12.2020.
10. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள்.30.08.2017.
11. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 13686/2017/LA1, நாள். 08.09.2017.

****

T5

பார்வை 1ல் சுட்டிய விண்ணப்பத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை 3-ல் சுட்டிய இவ்வலுவக கடிதம் நாள்.24.09.2021. மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 4-ல் சுட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தானப்பத்திர எண். 3227/2021 மற்றும் 3226/2021 நாள். 20.09.2021. - ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2) மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/ந.ஊ.து.இ,(விருமா)எண்.27/2021** என எண்ணிடப்பட்டு 4 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானப்பத்திரம் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

3) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5) செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள்**

1. (a) பார்வை 9 -ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 7 -ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47 (11)-ன்படியும் மாநகராட்சி,நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch/ permit of Planning authority along with approval local Body shall be issued to the applicant(s) directly.
2. (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16.நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்,31.01.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.
3. பார்வை 10 மற்றும் 11-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின்பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
4. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112. Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016), The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building , as the case may

be, in any Real Estate Project or part if it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority - ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

77

5. பார்வை 6-ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதி/திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண்.3-ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/- ஐயும் மற்றும் விதி எண்.9-ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

6. பார்வை 5 மற்றும் 9-ல் காண் அரசாணையின்படி மனைகளுக்கான நன்னிலை வரி, OSR கட்டணம் மற்றும் இதர கட்டணங்களை பார்வை-11 ல் கண்டுள்ள மனுதாரர் கடிதம் மூலம் துணை இயக்குநர், விருதுநகர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களால் பெறப்பட்ட பின்னரே திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.. மேலும் கொடிநாள் நிதியாக நன்னிலைவரி கட்டணத்தில் 20% தொகையை "Armed Force Flag Day Fund" என்ற பெயரில் Payable at Chennai என தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் வரைவோலை இவ்வலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

27/10/21

துணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
விருதுநகர் மாவட்டம்.

27/10/2021

**இணைப்பு**

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
(5 தொகுப்பு மற்றும் அசல் தானபத்திரம்)

**நகல்**

1. மனுதாரர்
   திரு.ரா.ஜீவாமோகன்,
   142, பாரதி நகர்,
   இராஜபாளையம் - 626 108.
   விருதுநகர் மாவட்டம்.
   (பத்தி ஒன்று மட்டும்)

   (பத்தி ஒன்று மட்டும்)

2. இருப்பு கோப்பு (வரைபடம்-1(ம) நிபந்தனைகள் படிவம்-1)
3. கோப்பு (வரைபடம்-1(ம) நிபந்தனைகள் படிவம்-1)

## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate